**வாக்குமூலம்**

**கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், சிவகங்கை**

**வழக்கு எண்.** SC.No.121/2015

**வழக்கு சாட்சி:** PW.18

**தேதி: 28.03.2025**

| | | | |
|---|---|---|---|
| **பெயர்:** | **திரு.சங்கர்** | **ஜாதி:** | |
| **தந்தை பெயர் :** | **கிருஷ்ணமூர்த்தி** | **தொழில்:** | |
| **கிராமம்:** | | **சமயம்:** | |
| **தாலுகா:** | | **வயது:** | |

**சாட்சி ஆஜர். சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு முதல் விசாரணை:**

நான் தற்சமயம் ஆவடி மாநகரம், பொன்னேரி சரக காவல் உதவி ஆணையராக பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்த 31.07.2012ம் தேதி சிவகங்கை தாலுகா காவல் நிலையத்தில் வட்டக் காவல் ஆய்வாளராக பணியிலிருந்த போது மேற்படி காவல் நிலைய சிறப்பு உதவி ஆய்வாளர் திரு.ராமச்சந்திரன் அவர்களால் பதிவு செய்யப்பட்ட மேற்படி காவல் நிலையக் குற்ற எண். 297/2012 இதச பிரிவுகள் 147, 148, 294(பி), 324, 302ன் கீழ் பதிவு செய்யப்பட்ட வழக்கு கோப்பை திரு.ராமச்சந்திரன் எனது மேல் விசாரணைக்கு வைத்தார். அதனை புலனாய்விற்கு எடுத்து கொண்டு சித்தலூார் சென்று சம்பவயிடத்தை சாட்சிகள் ரவிச்சந்திரன், விஸ்வநாதன் ஆகியோர்கள் முன்னிலையில் 31.07.2012ம் தேதி மதியம் 02.30 மணியளவில் பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் வரைபடம் தயார் செய்தேன். நான் தயார் செய்த பார்வை மகஜர் என்னிடம் காண்பிக்கப்படுவது தான். அது ஏற்கனவே அசா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. இவ்வழக்கு சம்பந்தமாக தயார் செய்த வரைபடம் என்னிடம் காண்பிக்கப்படுவது தான். அது **அசா.ஆ.19** ஆக குறியீடு செய்யப்படுகிறது. (அறிவியல் ஆய்வகத்திற்கு நீதித்துறை நடுவர் அனுப்பியுள்ள உத்தரவு அ.சா.ஆ.17 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. இந்நிலையில் முதல் தகவல் அறிக்கையின் நகலும் அசா.ஆ.17 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. எனவே முதல் தகவல் அறிக்கையை அசா.ஆ.18 ஆக வாசித்துக் கொள்ள உத்தரவிடப்படுகிறது)

MUTHUKUMARAN Digitally signed by MUTHUKUMARAN
Date: 2025.03.28 16:54:39 +0530

சம்பவயிடத்திலிருந்து அதே சாட்சிகள் முன்னிலையில் ரத்தம் படிந்த மற்றும் ரத்தம் படாத மண்ணை அத்தாட்சி தயாரித்து கைப்பற்றினேன். (அவற்றை சமர்ப்பிக்காதது சம்பந்தமாகவும் அது சம்பந்தமான ஆவணம் எதுவும் அரசு தரப்பில் ஏன் தாக்கல் செய்யப்படவில்லை என்பதற்கும் அரசு தரப்பில் விளக்கம் எதுவும் அளிக்கப்படவில்லை). பின்னர் பார்வை மகஜர் குறித்த சாட்சிகளை விசாரித்து அவர்களுடைய வாக்குமூலங்களை தனித்தனியாக பதிவு செய்தேன். பின்னர் அன்றே சிவகங்கை அரசு மருத்துவமனை சென்று அங்கு சவக்கிடங்கில் இருந்த புகார்தாரரின் தாயார் திருமதி.முத்துராமு என்பவரது உடலை அடையாளம் கண்டு அன்று மதியம் சுமார் 03.00 முதல் 04.30 மணி வரை பஞ்சாயத்தார்கள் நிறைகுளம், போஸ், உக்கிரபாண்டி, ராமு மற்றும் ஆனந்தக்குமார் ஆகியோர்கள் முன்னிலையில் இறந்தவருடைய இறப்பிற்கான காரணம் குறித்து பிரேத விசாரணை நடத்தினேன். அது சம்பந்தமாக நான் சமர்பித்துள்ள பிரேத விசாரணை அறிக்கை என்னிடம் காண்பிக்கப்படுவது தான். அது **அசா.ஆ.20** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பஞ்சாயத்தார்ளை விசாரித்து அவர்களுடைய கையெழுத்தை பெற்றேன். பிரேத பரிசோதனை செய்யும் பொருட்டு முதல்நிலை காவலர் திரு.கண்ணன் மூலம் இறந்தவரது உடலை பிரேத பரிசோதனை செய்ய மருத்துவருக்கு வேண்டுகோள் கடிதம் கொடுத்து அனுப்பினேன். அவர் பிரேத பரிசோதனை முடிந்த பிறகு உடலை உறவினர்களிடம் ஒப்படைத்துவிட்டு இறந்து போனவர் அணிந்திருந்த புடவை, ஜாக்கெட், பாவாடை ஆகியவற்றை மருத்துவரிடமிருந்து பெற்று வந்து ஆஜர்படுத்தினார். அதை படிவம் 91 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். அந்த படிவம் 91 என்னிடம் காண்பிக்கப்படுவது தான். அது **அசா.ஆ.21** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அந்த புடவை, ஜாக்கெட் மற்றும் பாவாடை என்னிடம் காட்டப்படுவது தான். அவைகள் ஏற்கனவே அசா.பொ.4 முதல் 6 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. பின்பு புகார்தாரையும் இவ்வழக்கின் சாட்சிகளான திருமதி.தீபா, திருமதி,மீனாட்சி, லதா, திரு.மாரிமுத்து, திரு.முத்துக்குமார் ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து அவர்களுடைய

MUTHUKUMARAN Digitally signed by MUTHUKUMARAN
Date: 2025.03.28 16:54:49 +0530

வாக்குமூலங்களை தனித்தனியாக பதிவு செய்தேன். பின்னர் மதுரை மீனாட்சி மருத்துவமனையில் சிகிச்சையிலிருந்த சாட்சி வாச்சாரக்காளை என்பவரை விசாரித்து அவரது வாக்குமூலத்தை 31.07.2012 அன்று பதிவு செய்தேன். 02.08.2012 அன்று காலை சுமார் 10.00 மணியளவில் சிவகங்கை - மதுரை மெயின் ரோட்டில் கரும்பாவூர் விலக்கு அருகே சாட்சிகள் தேவராஜ் மற்றும் திருமதி.அம்சவள்ளி ஆகியோர் முன்னிலையில் இவ்வழக்கின் எதிரி செல்லதுரை மற்றும் அழகுமலை ஆகியோர்களை கைது செய்தேன். அப்போது செல்லதுரை த ாமாக முன்வந்து ஒப்புதல் வாக்குமூலம் ஒன்று கொடுத்தார். அதை அதே சாட்சிகள் முன்னிலையில் பதிவு செய்தேன். அதில் என்னை அழைத்து சென்றால் நான் ... கம்பியை மறைத்து வைத்திருக்கும் இடத்திலிருந்து எடுத்து தங்களிடம் ஆஜர் செய்கிறேன் என கூறியுள்ளார். ஒப்புதல் வாக்குமூலத்தின் அந்த அனுமதிக்கப்பட்ட பகுதி **அசா.ஆ.22** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் எதிரி அழகுமலை தாமாக முன்வந்து அதே சாட்சிகள் முன்னிலையில் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்துள்ளார். அதை அதே சாட்சிகள் முன்னிலையில் பதிவு செய்தேன். அதில் அந்த எதிரி வழக்கு சொத்து சம்பந்தமாக எதுவும் கூறவில்லை. பின்னர் எதிரி செல்லதுரை என்பவர் அன்று மதியம் 12.30 மணியளில் உப்பாறு மேற்கு கரையில் வேலிக்கருவேல் முட்புதரிலிருந்து சுமார் நாலேகால் அடி நீளம் கொண்ட உருட்டு இரும்பு கம்பி ஒன்று எடுத்து ஆஜர்படுத்தினார். அதை அதே சாட்சிகள் முன்னிலையில் எடுத்து அத்தாட்சி தயாரித்து கைப்பற்றினேே. அந்த அத்தாட்சி ஏற்கனவே அசா.ஆ.11 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி எதிரி செல்லதுரையிடமிருந்து கைப்பற்றப்பட்ட இரும்பு கம்பி என்னிடம் காண்பிக்கப்படுவது தான். அந்த கம்பி ஏற்கனவே அசா.பொ.3 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. பின்னர் அன்று மதியம் 01.30 மணியளவில் மேற்படி இரண்டு எதிரிகளையும் நிலையம் கொண்டு வந்து அவர்களையும கைப்பற்றிய கம்பியையும் படிவம் 91யும் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். 03.08.2012ம் தேதி சாட்சிகள் சிங்கமுத்து மற்றும் முத்துக்கருப்பன்

MUTHUKUMARAN
Digitally signed by MUTHUKUMARAN
Date: 2025.03.28 16:54:57 +0530

ஆகியோர்களை விசாரித்து அவர்களுடைய வாக்குமூலங்களை தனித்தனியாக பதிவு செய்தேன். மற்ற எதிரிகள் நீதிமன்றத்தில் சரண்டாகி பிணையில் சென்றுவிடடதால் அவர்களை கைது செய்யவில்லை. 08.08.2012ம் தேதி 1ம் எதிரி மகாதேவன், 2ம் எதிரி பஞ்சவர்ணம், 3ம் எதிரி ராஜ்குமார், 5ம் எதிரி முத்துப்பாண்டி ஆகியோர்களை சிவகங்கை நீதித்துறை நடுவர் எண்.2 நீதிமன்றத்தில் மனு செய்து போலீஸ் காவலில் எடுத்து விசாரித்தேன். 09.08.2012ம் தேதி காலை சுமார் 10.15 மணிக்கு 1ம் எதிரி மகாதேவன் என்பவரை சிவகங்கை தாலுகா காவல் நிலையத்தில் வைத்து சாட்சிகள் விஏஓ தேவராஜ் மற்றும் கிராம உதவியாளர் அம்சவள்ளி ஆகியோர்கள் முன்னிலையில் விசாரித்த போது அவர் தாமாக முன்வந்து தன்னிச்சையாக ஒப்புதல் வாக்குமூலம் ஒன்று கொடுத்தார். அதை அதே சாட்சிகள் முன்னிலையில் பதிவு செய்தேன். அதில் எதிரி மகாதேவன் என்னை அழைத்து சென்றால் நான் சித்தலூர் உப்பாறு மேற்கு கரையில் மறைத்து புதைத்து வைத்துள்ள வேல் கம்பை எடுத்து தங்களிடம் ஆஜர் செய்கிறேன் என கூறியுள்ளார். ஒப்புதல் வாக்குமூலத்தின் அந்த அனுமதிக்கப்பட்ட பகுதி ஏற்கனவே அசா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. அதன்பின் 2ம் எதிரி பஞ்சவர்ணத்தை அதே காவல் நிலயத்தில் வைத்து அதே சாட்சிகள் முன்னிலையில் பெண் காவலர்கள் முன்னிலையில் விசாரித்த போது மேற்படி பஞ்சவர்ணம் தாமாக முன்வந்து ஒப்புதல் வாக்குமூலம் ஒன்று கொடுத்தார். அதை அதே சாட்சிகள் முன்னிலையில் பதிவு செய்தேன். அதில் அவர் இவ்வழக்கு சம்பந்தமாக சொத்து குறித்து எதுவும் தகவல் தெரிவிக்கவில்லை. அதன்பின் அதே காவல் நிலையத்தில் வைத்து அதே சாட்சிகள் முன்னிலையில் 3ம் எதிரி ராஜ்குமாரை விசாரித்த போது அவரும் தாமாக முன்வந்து ஒப்புதல் வாக்குமூலம் ஒன்று கொடுத்தார். அதை அதே சாட்சிகள் முன்னிலையில் பதிவு செய்தேன் அதில் அவர் தாங்கள் என்னை அழைத்து சென்றால் சித்தலூர் உப்பாறு மேற்குகரையில் புதைத்து வைத்துள்ள கத்தியை எடுத்து ஆஜர் செய்கிறேன் என கூறியுள்ளார். ஒப்புதல் வாக்கு

MUTHUKUMARAN Digitally signed by MUTHUKUMARAN
Date: 2025.03.28 16:55:06 +0530

மூலத்தின் அந்த அனுமதிக்கப்பட்ட பகுதி அசா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. அதன் பின் அதே காவல் நிலையத்தில் வைத்து 5ம் எதிரி முத்துப்பாண்டி என்பவரை அதே சாட்சிகள் முன்னிலையில் விசாரித்த போது அவரும் தாமாக முன்வந்து ஒப்புதல் வாக்குமூலம் ஒன்று கொடுத்தார். அதை அதே சாட்சிகள் முன்னிலையில் பதிவு செய்தேன். அதில் அவர் கம்பை அந்த இடத்திலேயே போட்டுவிட்டதாக கூறியுள்ளார். ஒப்புதல் வாக்கு மூலத்தின் அந்த அனுமதிக்கப்பட்ட பகுதி ஏற்கனவே அசா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. (மேற்படி பகுதியை சாட்சியமாக குறியீடு செய்ய இயலாது என எதிரிகள் தரப்பில் கற்றறிந்த வழக்குரைஞர் தெரிவித்துள்ளார். அது ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. அதன் சாட்சியத்தின் தன்மை குறித்து வழக்கு விசாரணை இறுதியில் தீர்மானிக்கப்படும்) 1ம் எதிரி மகாதேவன் சித்தலூர் உப்பாற்று மேற்கு கரையில் நாணல் அருகிலிருந்து 09.08.2012ம் தேதி மதியம் 03.40 மணியளவில் சாட்சிகள் தேவராஜ், அம்சவள்ளி முன்னிலையில் வேல் கம்பு ஒன்றை கைப்பற்றினேன். அந்த வேல் கம்பில் இரும்பு கத்தி பொருத்தப்பட்டிருந்தது. அந்த வேல் கம்பு என்னிடம் காண்பிக்கப்படுவது தான். அது ஏற்கனவே அசா.பொ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. அது சம்பந்தமான அத்தாட்சி என்னிடம் காண்பிக்கப்படுவது தான். அது ஏற்கனவே அசா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. பின்னர் அன்று 16.10 மணிக்கு சித்தலூர் உப்பாறு மேற்கு கரை நாணல் அருகிலிருந்து எதிரி ராஜ்குமார் அதே சாட்சிகள் முன்னிலையில் வளைந்த இரும்பு கத்தி ஒன்றை ஆஜர் படுத்தினார். அதை அதே சாட்சிகள் முன்னிலையில் அத்தாட்சி தயாரித்து கைப்பற்றினேன். அந்த அத்தாட்சி என்னிடம் காண்பிக்கப்படுவது தான். அந்த அத்தாட்சி ஏற்கனவே அசா.ஆ.10 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. அந்த கத்தி என்னிடம் காண்பிக்கப்படுவது தான். அது ஏற்கனவே அசா.பொ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. பின்னர் மேற்படி எதிரிகளையும் வழக்கு சொத்துக்களையும் நிலையம் கொண்டு வந்து படிவம் 91 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். எதிரி

MUTHUKUMARAN
Digitally signed by MUTHUKUMARAN
Date: 2025.03.28 16:55:15 +0530

ராஜ்குமாரிடமிருந்து கைப்பற்றப்பட்ட சொத்து சம்பந்தமான படிவம் 91 என்னிடம் காண்பிக்கப்படுவது தான். அது **அசா.ஆ.23** ஆக குறியீடு செய்யப்படுகிறது. எதிரி மகாதேவனிடமிருந்து கைப்பற்றப்பட்ட சொத்து சம்பந்தமான படிவம் 91 என்னிடம் காண்பிக்கப்படுவது தான். அது **அசா.ஆ.24** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அதில் எதிரி செல்லதுரையிடமிருந்து கைப்பற்றப்பட்ட முறுக்கு கம்பி பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளது என்று சாட்சி தெரிவிக்கிறார். பின்னர் சாட்சிகள் தேவராஜ், அம்சவள்ளி ஆகியோர்களை விசாரித்து அவர்களுடைய வாக்கு மூலங்களை தனித்தனியாக பதிவு செய்தேன். பின்னர் 24.08.2012ம் தேதி மதுரை மீனாட்சி மிஷன் மருத்துவமனை சென்று காயம்பட்ட வாச்சாரக்காளை என்பவருக்கு சிகிச்சையளித்தது சம்பந்தமான மருத்துவரை விசாரித்து அவருடைய வாக்குமூலத்தை பதிவு செய்து வாச்சாரக்காளைக்கு ஏற்பட்ட காயம் குறித்து காயச் சான்றிதழ் பெற்றேன். அந்த காயச்சான்றிதழ் என்னிடம் காண்பிக்கப்படுவது தான். அது அசா.ஆ.14 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. அதே தேதியில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த சிறப்பு சார்பு ஆய்வாளர் திரு.ராமச்சந்திரனை விசாரித்து அவருடைய வாக்கு மூலத்தை பதிவு செய்தேன். பின்னர் அதே தேதியில் புகார்தாரர் முருகேஸ்வரன் என்பவருக்கு சிகிச்சை அளித்த சிவகங்கை அரசு மருத்துவமனை மருத்துவர் திரு.குமரகுரு என்பவரை விசாரித்து அவருடைய வாக்குமூலத்தை பதிவு செய்து மேற்படி முருகேஸ்வரனுக்கு ஏற்பட்ட காயம் குறித்து காயச்சான்றிதழ் பெற்றேன். அதுகுறித்து மருத்துவர் வழங்கியுள்ள சான்றிதழ் என்னிடம் காண்பிக்கப்படுவது தான். அது ஏற்கனவே அசா.ஆ.15 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. இறந்து போன முத்துராமு என்பவரது உடல் உள்ளுறுப்புகளை ரசாயண பரிசோதனைக்கு அனுப்ப வேண்டுகோள் கடிதம் கொடுத்து நீதித்துறை நடுவரது உத்தரவு பெற்று காவலர் திரு.கண்ணன் மூலம் முத்துராமுவின் உடல் உள்ளுறுப்புகளை இராமநாதபுரம் வட்டார தடய அறிவியல் ஆய்வகத்திற்கு ரசாயண பரிசோதனைக்காக அனுப்பி

MUTHUKUMARAN Digitally signed by MUTHUKUMARAN Date: 2025.03.28 16:55:23 +0530

வைத்தேன். இது சம்பந்தமாக நீதித்துறை நடுவர் வழங்கியுள்ள கடிதம் என்னிடம் காண்பிக்கப்படுவது தான். அது ஏற்கனவே அசா.ஆ.16 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. இது சம்பந்தமாக அறிவியல் அலுவலர் திருமதி.விஜயாவை விசாரித்து அவருடைய வாக்குமூலத்தை பதிவு செய்தேன். அவர் கொடுத்த விசிரா அறிக்கை என்னிடம் காண்பிக்கப்படுவது தான். அது ஏற்கனவே அசா.ஆ.12 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. 04.01.2013ம் தேதி காவலர் திரு.கண்ணன் அவர்களை விசாரித்து அவருடைய வாக்குமூலத்தை பதிவு செய்தேன். எதிரியிடமிருந்து கைப்பற்றப்பட்ட சொத்துக்களையும் இறந்து போனவருடைய உடலிலிருந்து கைப்பற்றப்பட்ட சொத்துக்களையும் காவலர் திரு.கண்ணன் மூலம் நீதிமன்ற உத்தரவு பெற்று இராமநாதபுரம் ரசாயண பரிசோதனை ஆய்வகத்திற்கு அனுப்பி வைத்தேன். அது சம்பந்தமாக நீதித்துறை நடுவர் பிறப்பித்துள்ள உத்தரவின் நகல் என்னிடம் காண்பிக்கப்படுவது தான். அது ஏற்கனவே அசாஆ.17 ஆக குறியீடு செய்யப்படுகிறது. 20.04.2013ம் தேதி இளநிலை ஆய்வாளர் திரு.வைரமுத்து அவர்களை விசாரித்து அவருடைய வாக்குமூலத்தை பதிவு செய்து அவரிடமிருந்து அறிக்கை பெற்றேன். அது **அசா.ஆ.25** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அதில் அனுப்பப்பட்ட 1 முதல் 3 அயிட்ட சொத்துக்களில் ரத்தம் படிந்திருந்ததாகவும் 4வது அயிட்ட சொத்தில் ரத்தம் இல்லை என்றும் கண்டறியப்பட்டுள்ளது. அனுப்பி வைக்கப்பட்ட சொத்துக்களில் இருந்த ரத்தத்தின் வகைப்பாடு குறித்து அறிக்கை கிடைக்கப்பெற்றுள்ளது. அந்த அறிக்கை என்னிடம் காண்பிக்கப்படுவது தான். அது **அசா.ஆ.26** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 18.02.2013ம் தேதி பிரேத பரிசோதனை செய்த மருத்தவரை செய்த மருத்துவர் திரு.வைரவசுந்தரம் என்பவரை விசாரித்து இறந்து போனவருடைய சடலக்கூறாய்வு அறிக்கையை பெற்றேன். அந்த அறிக்கை என்னிடம் காண்பிக்கப்படுவது தான். அது ஏற்கனவே அசா.ஆ.13 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. அதே தேதியில் துரித முதல் தகவல் அறிக்கையை எடுத்து சென்ற தலைமைக் காவலர் தனசேகரன்

MUTHUKUMARAN Digitally signed by MUTHUKUMARAN
Date: 2025.03.28 16:55:32 +0530

என்பவரை விசாரித்து அவருடைய வாக்குமூலத்தை பதிவு செய்தேன். 29.4.2013ம் தேதி சிவகங்கை குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் பணிபுரிந்த தலைமை எழுத்தர் திரு.பழனிச்சாமி என்பவரை விசாரித்து அவருடைய வாக்குமூலத்தை பதிவு செய்தேன். ஆய்வகத்திற்கு அனுப்பப்பட்ட பொருட்களை திரும்பப் பெற்று வந்து நீதிமன்றத்தில் ஒப்படைத்த சிறப்பு உதவி ஆய்வாளர் திரு.சந்திரசேகரன் அவர்களை விசாரித்து அவருடைய வாக்கு மூலத்தை பதிவு செய்தேன். பின்னர் இந்த வழக்கின் புலன் விசாரணையை முடித்து சேகரிக்கப்பட்ட சாட்சியங்களின் அடிப்படையில் எதிரிகளுக்கு எதிராக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன். சாட்சிகள் குவிமுச பிரிவு 161(3)ல் குறிப்பிட்டுள்ளபடி என்னிடம் வாக்குமூலம் கொடுத்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:**

முதல் தகவல் அறிக்கையை நான் சிவகங்கை தாலுகா காவல் நிலையத்தில் வைத்து பார்வையிட்டேன். அப்போது மணி பகல் 02.00 இருக்கும். சித்தலூர் சிவகங்கை தாலுகா காவல் நிலையத்திலிருந்து 15 கி.மீ தூரத்தில் உள்ளது. முதல் தகவல் அறிக்கையை முழுமையாக படித்து பார்த்த பிறகு தான் எனது விசாரணையை தொடங்கினேன். நான் முதல் தகவல் அறிக்கையை படித்து பார்த்த போது அந்த நேரத்தில் புகார் கொடுத்த நபர் காவல் நிலையத்தில் இருந்தாரா என்று கேட்டால் இல்லை. புகாரில் புகார்தாரர் சிவகங்கை பாரதி நகரில் குடும்பத்துடன் வசிப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த வீட்டில் அவர்கள் எத்தனை வருடமாக வசித்து வருகிறார்கள் என்று விசாரித்தீர்களா என்று கேட்டால் விசாரித்தேன் ஆனால் தற்போது அது பற்றி எனக்கு ஞாபகமில்லை. பாரதி நகருக்கும் சித்தலூருக்கும் சுமார் 12 கி.மீ தூரம் இருக்கும். புகார்தாரருக்கு சித்தலூரில் வீடு உள்ளதா ஊராட்சி தலைவர், கிராம நிர்வாக அதிகாரி, கிராம ஊராட்சி செயலர் ஆகியோர்களை விசாரித்து தெரிந்து கொண்டேனா என்று கேட்டால் அவர்களிடம் கேட்டு தெரிந்து கொள்ளவில்லை. புகார்தாரருக்கு சித்தலூரில் வீடு உள்ளதாக காட்ட வீட்டு வரி ரசீதோ வேறு எந்த ஆவணமும் நான் தாக்கல் செய்யவில்லை.

MUTHUKUMARAN Digitally signed by MUTHUKUMARAN Date: 2025.03.28 16:55:41 +0530

மகாதேவன் வீட்டு முன் உள்ள இடப்பிரச்சினை சம்பந்தமாக 2 வருடமாக எதிரி குடும்பத்திற்கும் தனது குடும்பத்திற்கும் பேச்சு வார்த்தை இல்லை என்று புகார்தாரர் புகாரில் சொல்லியுள்ளார். சிவகங்கை தாலுகா காவல் நிலையத்தில் குற்ற எண்.109/2011ல் சாட்சி லதா, அவரது கணவர் முத்துக்கருப்பன் மற்றும் இரண்டு நபர்கள் மீது எதிரி ராஜ்குமார் கொடுத்துள்ள புகாரின் பேரில் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் அவ்வாறு பதிவு செய்யப்பட்டுள்ளது. 3ம் எதிரி வீட்டில் இருக்கும் போது இந்த வழக்கின் புகார் தரப்பினர் வந்து தாக்கியதாக பதிவு செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் அவ்வாறு பதிவு செய்யப்பட்டுள்ளது. சாட்சி லதாவின் கணவர் முத்துக்கருப்பன் முரசுப்பட்டி என்ற ஊரை சார்ந்தவர் என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. முரசுப்பட்டி சித்தலூரிலிருந்து எவ்வளவு தூரத்தில் உள்ளது என்று எனக்கு தெரியாது. புகாரில் 4 நாட்களுக்கு முன்பு விளக்கமாற்றால் தனது அம்மாச்சியை 2வது எதிரி தாக்கிவிட்டதாக புகார்தாரர் குறிப்பிட்டுள்ளார் என்று சொன்னால் அவ்வாறு குறிப்பிட்டுள்ளார். அவ்வாறு சம்பவம் நடந்ததா என அக்கம் பக்கம் உள்ளவர்களிடம் நான் விசாரித்தேனா என்று கேட்டால் நான் விசாரிக்கவில்லை. 31.07.2012ம் தேதி டாடா சுமோ வாகனத்தில் இறந்து போன நபரும் அசா1, 2, 3ம் வந்ததாக புகாரில் சொல்லப்பட்டுள்ளது என்று சொன்னால் அவ்வாறு சொல்லப்பட்டுள்ளது. தனது தங்கையின் நினைவு நாளிற்கு டாடா சுமோ காரில் சென்றதாக புகார்தாரர் புகாரில் சொல்லியுள்ளார். புகாரில் தன் தங்கையின் பெயர் என்ன என்று புகார்தாரர் குறிப்பிடவில்லை. முதலில் பிறந்தவரை அக்கா என்றும் பின்னாளில் பிறந்தவரை தங்கை என்றும் அழைப்பார்கள். இறந்தவருக்கு தங்கை இருந்ததாகவும் அவர் இறந்ததாகவும் காட்ட ஆவணம் எதையும் நான் தாக்கல் செய்யவில்லை. வாதி வீட்டில் ரூபா என்ற பெண் பிறந்ததாகவோ அவர் இறந்ததாகவோ நான் ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை. நான் முதல் தகவல் அறிக்கையை படித்துவிட்டு அரை மணிநேரத்திற்குள் சம்பவயிடத்திற்கு சென்றேன். சம்பவயிடத்திற்கு அருகே

MUTHUKUMARAN Digitally signed by MUTHUKUMARAN Date: 2025.03.28 16:55:50 +0530

யார் யார் வசிக்கிறார்கள் என்பது குறித்து அங்கு வசிப்பவர்களிடம் விசாரித்து குறித்து கொண்டேன். சித்தலூரில் குறைந்தது 500 குடும்பங்கள் வசிக்கும் என்று சொன்னால் 200 குடும்பங்கள் வசிக்கும். அந்த ஊரில் பலதரப்பட்ட வகுப்பினர் வசிக்கின்றனர். சித்தலூரில் ஒரு தொடக்கப்பள்ளியும் ஒரு மேல் நிலைப்பள்ளியும் உள்ளது. சிவகங்கை - மதுரை ரோட்டின் தெற்கு புறம் சுமார் 5 கி.மீ உள்ளே சித்தலூர் அமைந்துள்ளது. கரும்பாவூர் பஸ் ஸ்டாப் வழியாக அந்த ஊருக்கு செல்ல வேண்டும். அந்த கரும்பாவூர் பஸ் ஸ்டாப் அருகே பிரசித்தி பெற்ற இரட்டை குதிரை அய்யனார் கோவில் உள்ளது. அங்கு எப்போதும் ஆட்கள் வழிபட்டு கொண்டிருப்பார்கள் என்று சொன்னால் அந்த அளவிற்கு கூட்டம் இருக்காது. எனது அனுமானத்தின் படி அந்த கோவிலில் ஒருநாளைக்கு எத்தனை பேர் சாமிக்கும்பிடுவார்கள் என்று கேட்டால் அது பற்றி எனக்கு தெரியாது. மெயின் ரோட்டிலிருந்து கரும்பாவூர் வழியாக சித்தலூர் வரை செல்ல டவுன் பஸ் உள்ளது என்று சொன்னால் உள்ளது. இந்த வழக்கு சம்பவம் நடந்ததாக கூறப்படும் தேதிக்கு முன் நான் சித்தலூர் சென்றுள்ளேனா என்று கேட்டால் சென்றுள்ளேன். சித்தலூர் பஸ் ஸ்டாப்பினுள் நுழையும் போது மேற்கு புறம் கண்மாயும் கிழக்கு புறம் ஊரும் உள்ளது. வடக்கிலிருந்து தெற்காக அந்த ஊருக்கு ரோடு உள்ளது. அதில் பஸ் ஸ்டாப்பிற்கு தெற்கே பள்ளி உள்ளது. பள்ளியின் முன்பாக ஊருக்கு செல்லவும் கண்மாயிக்கு செல்லவும் கிழமேல் ரோடு உள்ளது என்று சொன்னால் எனக்கு ஞாபகமில்லை. கண்மாய் முடிந்த பிறகு ஊர் ஆரம்பிக்கிறது என்று சொன்னால் அது சரிதான். எதிரிகளின் வீடு கண்மாயின் தெற்கு புற கரையில் அமைந்துள்ளது என்று சொன்னால் அது பற்றி எனக்கு ஞாபகமில்லை. அது பற்றி வரைபடத்திலும் குறிப்பிடவில்லை. வரைபடத்தில் அழகர்சாமி என்று காட்டப்பட்டுள்ள வீட்டிற்கு வடக்காக தான் கண்மாய் ஆரம்பிக்கிறது என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. சித்தலூர் சுற்றிலும் கண்மாய் மற்றும் ஆற்று பாசனம் உள்ள ஊர் என்று சொன்னால் அது சரிதான். பொதுவாக அந்த ஊர்பக்கம் அதிகாலை கழனி

MUTHUKUMARAN Digitally signed by MUTHUKUMARAN
Date: 2025.03.28 16:55:58 +0530

வேலைக்கு சென்றுவிட்டு காலை 11.00 மணிக்கு தான் திரும்புவார்கள் என்று சொன்னால் அது சரியல்ல. பார்வை மகஜர் மற்றும் வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள மற்ற நபர்களை இவ்வழக்கில் சாட்சிகளாக சேர்க்கவில்லை. தன் மாமா முத்துக்கருப்பன் சம்பவ சமயத்தில் உடனிருந்ததாக புகாரில் குறிப்பிட்டு சொல்லப்படவில்லை. அரசு மருத்துவமனைக்கு சென்ற பிறகு காவல் நிலையத்திற்கு வந்ததாக புகார்தாரர் புகாரில் சொல்லியுள்ளார். அவர் காவல் நிலையத்திற்கு வந்த போது மருத்துவமனையில் சிகிச்சை பெற்றதாக ஆவணம் எதையும் என்னிடம் கொடுத்தாரா என்று கேட்டால் அப்போது அவர் என்னிடம் மருத்துவ ஆவணம் எதையும் கொடுக்கவில்லை. ஒருவர் காயத்துடன் முதன்முதலாக மருத்துவமனை சென்றால் அதுபற்றி விபத்து பதிவேடு பதிவு செய்யப்படும். அசா.ஆ.15 விபத்து பதிவேடு நகல் அல்ல என்று சொன்னால் அது சரியல்ல. அது விபத்து பதிவேடு அல்ல என்றும் இந்த வழக்கிற்காக மாற்றி சாட்சியமளிக்கிறேன் என்றும் சொன்னால் அது சரியல்ல. சாட்சிகள் மாரிமுத்து மற்றும் முத்துக்குமார் ஆகியோர்களின் வீடுகள் பற்றி மாதிரி வரைபடத்தில் குறிப்பிட்டு காட்டப்படவில்லை என்று சொன்னால் குறிப்பிட்டு காட்டப்படவில்லை. சாட்சி லதாவின் கணவர் முத்துக்கருப்பனுக்கு சம்பவயிடத்திற்கு அருகில் வீடு இருப்பதாக வரைபடத்தில் குறிப்பிட்டு காட்டப்படவில்லை என்று சொன்னால் புகார்தாரர் முருகேஸ்வரன் வீட்டில் தான் முத்துக்கருப்பன் இருக்கிறார் என சாட்சி கூறுகிறார். முருகேஸ்வரனுக்கும் அவரது அம்மாச்சி மீனாட்சி அம்மாளுக்கும் சம்பவயிடத்திற்கு அருகே வீடு இருப்பதாக குறிப்பிடப்படவில்லை என்று சொன்னால் முத்துராமு வீட்டில் தான் அவர்கள் இருந்துள்ளார்கள் என சாட்சி கூறுகிறார். முத்துக்கருப்பனும் லதாவும் சம்பவம் நடந்ததாக கூறப்படும் இடத்திற்கு அருகில் வசிக்கவில்லை என்றும் அவர்கள் சிவகங்கை காளவாசல் பகுதியில் சம்பவம் நடந்ததாக கூறப்படும் தேதிக்கு முன் 15 வருடங்களாக வசித்து வருகிறார்கள் என்றும் சொன்னால் அது சரியல்ல. முத்துக்கருப்பனுடைய வீடு சித்தலூரில் கிடையாது என்று சொன்னால் அது

MUTHUKUMARAN
Digitally signed by MUTHUKUMARAN
Date: 2025.03.28 16:56:07 +0530

சரியல்ல. சித்தலூரில் முத்துராமுக்கோ அவருடைய கணவர் சிங்கமுத்துக்கோ தாயார் மீனாட்சிக்கோ எவ்வித சொத்தும் இல்லை என்று சொன்னால் அது சரியல்ல. அவர்களுக்கு அங்கு சொத்து எதுவும் இல்லை என்றும் அதனால் ஆவணம் எதுவும் நான் தாக்கல் செய்யவில்லை என்றும் சொன்னால் அது சரியல்ல. முத்துராமுவிற்கு சித்தலூரில் எந்த கதவிலக்கத்தில் வீடு உள்ளது என குற்ற இறுதி அறிக்கையில் குறிப்பிட்டு நான் எதுவும் சொல்லவில்லை. பட்டியல் சாட்சிகள் 1 முதல் 8 இறந்து போன முத்துராமுவின் குடும்பத்தினர் என்று சொன்னால் அது சரிதான். சாட்சி ரவிசந்திரன் சாட்சி தீபாவின் கணவர் என்று சொன்னால் அது சரிதான். சாட்சி விஸ்வநாதன் சாட்சி சிங்கமுத்துவின் உறவினர் என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. சாட்சி விஸ்வநாதனும் சாட்சி ரவிசந்திரனும் மதுரை சென்றுகொண்டிருந்த போது சாட்சி தீபா அலைபேசியில் அழைத்ததின் பேரில் அவர்கள் ஊருக்கு வந்ததாக என்னுடைய விசாரணையில் சொல்லியுள்ளார்கள் என்று சொன்னால் அவ்வாறு சொல்லியுள்ளார்கள். சாட்சி ரவிசந்திரன் சாட்சி விஸ்வநாதனின் மருமகன் என எனது விசாரணையில் சொல்லியுள்ளார் என்று சொன்னால் அது சரிதான். சாட்சி மாரிமுத்து சென்னையில் நெய் வியாபாரம் செய்து வருகிறார் என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. சம்பவயிடத்திற்கு அருகே உள்ள நபர்களிடம் விசாரித்தால் உண்மை தெரிந்து விடும் என்பதால் அவர்களை விலக்கி புகார்தாரரின் உறவினர்களை மட்டும் வைத்து எதிரிகளுக்கு எதிராக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் அது சரியல்ல. எந்த தேதி, எந்த வருடம் புகார்தாரருடைய சகோதரி இறந்தார் என குற்ற இறுதி அறிக்கையில் சொல்லப்படவில்லை. நான் பார்வை மகஜர் தயார் செய்த போது சம்பவம் நடந்து 3 மணி நேரம் ஆகியிருக்குமா என்று கேட்டால் ஆகியிருக்கும். பார்வை மகஜரில் சம்பவயிடத்தில் ரத்தத்துளி இருந்ததாக குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்று சொன்னால் குறிப்பிட்டு சொல்லப்படவில்லை. சம்பவயிடத்தில் கிடந்ததாக கூறப்படும் கம்பு வீடு கட்டுவதற்கு பயன்படுத்தும் மட்ட கம்பு

MUTHUKUMARAN Digitally signed by MUTHUKUMARAN
Date: 2025.03.28 16:56:16 +0530

என்றும் சொன்னால் அது சரியல்ல. அது வீடு கட்ட பயன்படுத்தும் மட்ட கம்பு என்பதினால் தான் நான் அதனை கைப்பற்றாமல் வந்துவிட்டேன் என்று சொன்னால் அது சரியல்ல. சம்பவயிடத்திற்கு அருகிலிருந்ததாக கூறப்படும் வீடுகளில் ஆட்கள் இருந்தார்களா, அது சிதிலமடைந்து இருந்ததா என்று நான் பார்வை மகஜரில் குறிப்பிடவில்லை. நான் சம்பவயிடத்தை பார்வையிட்டதாக சொல்லும் சமயத்தில் எதிரிகளின் வீட்டில் கட்டிட வேலை நடந்து கொண்டிருந்தது என்றும் அதனை நான் பார்வை மகஜரில் குறிப்பிடவில்லை என்றும் சொன்னால் அது சரியல்ல. அவ்வாறு கட்டிட வேலை எதுவும் நடைபெறவில்லை. சம்பவயிடத்தில் பூஜை செய்யப்பட்டதற்கான பொருட்கள் இருந்த தடயம் எதுவும் இருந்ததாக பார்வை மகஜரில் நான் குறிப்பிடவில்லை என்று சொன்னால் பூஜை செய்ததற்கான பொருட்கள் இருந்ததற்கான தடயம் இருந்தது ஆனால் பார்வை மகஜரில் அதை குறிப்பிடவில்லை என சாட்சி கூறுகிறார். சம்பவயிடத்தில் இருக்கும் தடயத்தை பார்வை மகஜரில் பதிவு செய்ய வேண்டும் என்பது எனக்கு தெரியும். அந்த இடத்தில் அந்த சமயத்தில் பூஜை செய்ததற்கான பொருள் இருந்ததற்கான தடயம் இல்லை என்றும் அதனால் அதை நான் குறிப்பிடவில்லை என்றும் சொன்னால் அது சரியல்ல. பார்வை மகஜர் குறித்த சாட்சிகள் மற்றும் இவ்வழக்கின் இதர சாட்சிகள் புகார்தாரரின் மீது அக்கறை உள்ள சாட்சிகள் என்று சொன்னால் அது சரியல்ல. சந்தேக எதிரியை கைது செய்வதற்கான உச்சநீதிமன்ற வழிகாட்டுதல் பற்றியும் காவல் நிலையாணை பற்றியும் எனக்கு தெரியும். ரகசிய தகவல் கிடைத்தால் பொதுநாட்குறிப்பேட்டில் குறிக்க வேண்டும் என்று சொன்னால் அது சரியல்ல. எந்த தேதியில் எத்தனை மணிக்கு இந்த வழக்கு சம்பந்தமாக ரகசிய தகவல் கிடைத்தது என குறிப்பு உள்ளதா என்று கேட்டால் குறிப்பு இல்லை. விஏஓ மற்றும் தலையாரியுடைய உதவி தேவைப்படுவதாக அவர்களுடைய மேல் அதிகாரிகளுக்கு தகவல் எதுவும் நான் அனுப்பவில்லை, போனில் தகவல் சொன்னேன். நான் போனில் சொல்லி எவ்வளவு நேரம் கழித்து சாட்சிகள் தேவராஜ், அம்சவள்ளி

MUTHUKUMARAN
Digitally signed by MUTHUKUMARAN
Date: 2025.03.28 16:56:25 +0530

வந்தார்கள் என்று கேட்டால் சுமார் அரை மணிநேரத்தில் வந்தார்கள். கரும்பாவூர் பஸ் ஸ்டாப் எப்போதும் போக்குவரத்து அதிகம் உள்ள சாலையில் உள்ள பஸ் ஸ்டாப். அக்கம் பக்கம் உள்ள கிராமத்திற்கு அந்த பஸ் ஸ்டாப் தான் சர்வீஸ் பாயிண்ட் ஆகும். அங்கே எப்போது பஸ்சிற்காக பயணிகள் காத்துக் கொண்டிருப்பார்கள் என்று சொன்னால் அது சரியல்ல. அந்த பஸ் ஸ்டாப்பிலும் எதிரே உள்ள இரட்டை குதிரை அய்யனார் கோவிலிலும் எப்போதும் அங்கே ஆட்கள் இருப்பார்கள் என்றும் இந்த வழக்கிற்காக அங்கு ஆட்கள் இருக்கமாட்டார்கள் என்று சாட்சியமளிக்கிறேன் என்று சொன்னால் அது சரியல்ல. நான் சொன்ன தேதியில் சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் சொன்ன சாட்சிகள் முன்னிலையில் அழகுமலை, செல்லதுரை ஆகியோர்கள் கைது செய்யப்படவில்லை என்று சொன்னால் அது சரியல்ல. நான் சொன்ன நேரத்தில் சொன்ன தேதியல் எதிரிகள் எவரும் ஒப்புதல் வாக்குமூலம் எதுவும் கொடுக்கவில்லை என்று சொன்னால் அது சரியல்ல. எதிரிகளிடமிருந்து எந்த சான்று பொருளும் கைப்பற்றப்படவில்லை என்று சொன்னால் அது சரியல்ல. பார்வை மகஜர், வரைபடம், ஒப்புதல் வாக்கு மூலங்கள், கைப்பற்றுகை மகஜர்கள், இந்த வழக்கின் சான்று பொருட்கள் அனைத்தும் காவல் நிலையத்தில் வைத்து பின்னிட்டு உற்பத்தி செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் அது சரியல்ல. அசா.ஆ.15ல் நேரம் சம்பவம் நடந்ததாக தெரிவிக்கப்பட்டதாக கூறப்படும் நேரம் 10.50 என எழுதப்பட்டு பின்பு 11.50 என திருத்தப்பட்டுள்ளது என்று சொன்னால் அவ்வாறு தான் திருத்தப்பட்டு காணப்படுகிறது. அதில் 4 தெரிந்த நபர்களால் கத்தியால் தாக்கப்பட்டதாக மருத்துவரிடம் தெரிவிக்கப்பட்டதாக குறிப்பு எழுதப்பட்டுள்ளது. அசா.ஆ.15ல் சிதைந்த காயம் ஏற்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது. அசா.1 ஐ 3ம் எதிரி கத்தியால் குத்தியதாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது. மருத்துவரிடம் விசாரித்த போது கத்தி எதையும் நான் காட்டவில்லை. அரசு தரப்பில் கூறப்படுவது போல் அசா.1க்கு காயம் எதுவும் ஏற்படவில்லை என்று சொன்னால் அது சரியல்ல. அசா.ஆ.14ல் 31.07.2012ம்

MUTHUKUMARAN
Digitally signed by MUTHUKUMARAN
Date: 2025.03.28 16:56:35 +0530

தேதி அதிகாலை 12.30 மணிக்கு காயம் ஏற்பட்டதாக தன்னிடம் தெரிவிக்கப்பட்டதாக மீனாட்சி மிஷன் மருத்துவமனை மருத்துவர் குறிப்பு எழுதியுள்ளார் என்று சொன்னால் அவ்வாறு குறிப்பு எழுதியுள்ளார். அதில் ஏற்கனவே தையலிட்ட காயம் என மருத்துவர் குறிப்பிட்டுள்ளார் என்று சொன்னால் அது சரியல்ல. அவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது என சாட்சி பின்னிட்டு கூறுகிறார். ஆசிபிடல் ரிஜியன் என்பது பின்னந்தலையை குறிக்கும். வாச்சாரக்காளையின் பின்னந்தலையில் எதிரிகள் தாக்கியதாக எனது விசாரணையில் சாட்சிகள் எவரும் குறிப்பிடவில்லை என்று சொன்னால் தலையின் இடது பக்கம் அடித்ததாக தான் சொல்லியுள்ளார்கள். வாச்சாரக்காளைக்கு போடப்பட்ட தையில் எந்த மருத்துவரால் எங்கு வைத்து போடப்பட்டது என்று நான் தெரிந்து கொள்ளவில்லை. முதன்முதலாக வாச்சாரக்காளைக்கு சிகிச்சை அளித்த மருத்துவரை விசாரித்தால் தான் அது சிதைந்த காயமா அல்லது அது வெட்டுக்காயமா என்பது தெரிய வரும் என்று சொன்னால் அது சரியல்ல. வாச்சாராக்காளைக்கு அளிக்கப்பட்ட சிகிச்சை சம்பந்தமான ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை. இறந்து போன நபருடைய உடலில் முன்பகுதியில் தான் காயம் இருந்ததாக சடலக்கூறாய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் விலா எலும்பிலும் காயம் ஏற்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது. உடற்கூறாய்வு செய்த மருத்துவரிடம் விசாரித்த போது ஆயுதத்தை காட்டி விசாரித்தேனா என்று கேட்டால் ஆயுதத்தை காட்டவில்லை. அசா.ஆ.25ல் 4வது லக்க சொத்து வேல் கம்பு அல்ல என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இறந்து போன நபரது உடலிலிருந்து எடுக்கப்பட்ட உடைகளை தவிர மற்ற பொருட்களில் எந்த வகை ரத்தம் இருந்தது அது மனித ரத்தமா என்பது பற்றி அறிக்கை பெறப்படவில்லை. உப்பாறு என்பது தென்வடலாக செல்லக்கூடிய காட்டாறாகும். அதன் கிழக்கு கரைக்கும் அதன் மேற்கு கரைக்கும் இடையே சுமார் 100 மீட்டர் (அகலம்) இருக்கும். அதில் நாணல் நிறைந்திருந்தது. இவ்வழக்கு சம்பந்மாக கைப்பற்றப்பட்ட கத்தி, கம்பு சாதாரணமாக எல்லா இடங்களில்

MUTHUKUMARAN Digitally signed by MUTHUKUMARAN Date: 2025.03.28 16:56:43 +0530

கிடைக்கும். இந்த வழக்கில் முன்னிடப்பட்டுள்ள ஆயுதங்கள் இந்த வழக்கிற்காக பின்னிட்டு தயாரிக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் அது சரியல்ல. குற்ற எண்.109/2011 வழக்கு வீட்டை விற்க கேட்டது சம்பந்தமாக எழுந்த பிரச்சனை தொடர்பானது என்று சொன்னால் அது சரியல்ல. எதிரியினுடைய குடும்பத்தை சார்ந்த நித்தியா என்ற நபரை வாதி குடும்பத்தினர் திருமணம் செய்து கொடுக்கும்படி கேட்டதாகவும் அதை எதிரி குடும்பத்தார்கள் மறுத்துவிட்டார்கள் என்றும் அதனால் புகார்தாரர் குடும்பம் எதிரி குடும்பத்தினர் மீது பகைமை உள்ளது என்று சொன்னால் அது சரியல்ல. புகார் தாரர் தரப்பினர் எதிரிகள் வீட்டின் கேட்டை பெண் கொடுக்காதினால் உடைத்துவிட்டு போய்விட்டார்கள் என்று சேர்னனால் அது சரியல்ல ஆனால் அவர்கள் வீட்டில் சேதம் இருந்தது. ஓட்டில் சேதம் ஏற்பட்டிருந்தது என சாட்சி கூறுகிறார். 1ம் எதிரியின் வீட்டில் கம்பி கேட் இருந்தது என்றும் அதில் சேதம் ஏற்பட்டிருந்தது என்றும் அதை நான் இந்த வழக்கிற்காக மறைத்துவிட்டேன் என்று சொன்னால் அது சரியல்ல. கம்பி கேட்டே இல்லை என்று சாட்சி கூறுகிறார். எதிரி தரப்பினர் கம்பி கேட்டை கட்டி கொண்டிருந்தனர் என்றும் அதை தடுக்க வெண்டும் என்ற எண்ணத்தில் புகார்தாரர் குடும்பத்தினர் சம்பவயிடத்திற்கு வந்துள்ளனர் என்ற சொன்னால் அது சரியல்ல. புகார்தாரர் தரப்பினர் தான் எதிரிகளுடன் பிரச்சினை செய்ய வேண்டும் என்ற எண்ணத்தில் 15 கி.மீ தூரம் கடந்து சம்பவம் நடந்ததாக கூறப்படும் இடத்திற்கு வந்துள்ளனர் என்று சொன்னால் அது சரியல்ல. சம்பவம் நடந்ததாக கூறப்படும் சமயத்தில் சிங்கமுத்துவும் முத்துப்பாண்டியும் மட்டுமே இருந்தனர் என்றும் அவர்கள் கட்டிடத்தை கட்டிக் கொண்டிருந்தனர் என்றும் சொன்னால் அது சரியல்ல. பார்வை மகஜரில் காட்டப்படும் கம்பு வீடு கட்ட முத்துப்பாண்டியால் உபயோகப்படுத்தப்பட்ட மட்டக் கம்பு என்று சொன்னால் அது சரியல்ல. வாதி தரப்பினர் வழிபாடு செய்வதற்காக சம்பவயிடத்திற்கு வந்ததாக பொய்யாக கூறுகிறேன் என்று சொன்னால் அது சரியல்ல. நான் சொன்ன தேதியில் சம்பவம் நடந்ததாக கூறப்படும் இடத்தில்

MUTHUKUMARAN Digitally signed by MUTHUKUMARAN
Date: 2025.03.28 16:56:52 +0530

வழிபாடு எதுவும் நடக்கவில்லை என்றும் அதனால் தான் சாட்சிகள் சிங்கமுத்துவும் லதாவும் அங்கு வரவில்லை என்றும் சொன்னால் அது சரியல்ல. முத்துராமு பிரச்சினை செய்ய வந்தார் என்றும் அவரே கம்பி கிராதில் விழுந்து இறந்துவிட்டார் என்றும் சொன்னால் அது சரியல்ல. முத்துராமுவிற்கு ஏற்பட்ட காயத்திற்கு தோதாக இந்த வழக்கில் வேல்கம்பை உற்பத்தி செய்து தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் அது சரியல்ல. அது காவல் நிலையத்தில் இந்த வழக்கிற்காக உற்பத்தி செய்யப்பட்டுள்ளது என்றும் அதனால் தான் அதில் ரத்தக்கறை இல்லை என்றும் சொன்னால் அது சரியல்ல. வாதி தரப்பினர் தான் இந்த வழக்கில் அத்துமீறி வந்துள்ளார்கள் என்றும் அவர்கள் தான் குற்றம் இழைத்துள்ளார்கள் என்றும் சொன்னால் அது சரியல்ல. புகார்தாரர் தரப்பில் இறப்பு ஏற்பட்டுள்ளதால் எதிரிகளுக்கு எதிராக இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் அது சரியல்ல. புகார்தாரரை சாராத சுதந்திரமான சாட்சிகளை விசாரித்திருந்தால் உண்மை தெரிய வந்திருக்கும் என்றும் நான் சரியாக புலன் விசாரணை செய்யவில்லை என்றும் சொன்னால் அது சரியல்ல. எனது குற்ற இறுதி அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது போல் எந்த குற்றம் எதிரிகள் செய்யவில்லை என்றும் சொன்னால் அது சரியல்ல. எதிரிகள் நிரபராதி என்றும் அவர்களுக்கு எதிராக இந்த வழக்கு பொய்யாக ஜோடிக்கப்பட்டுள்ளது என்றும் சொன்னால் அது சரியல்ல.

MUTHUKUMARAN Digitally signed by MUTHUKUMARAN Date: 2025.03.28 16:57:01 +0530